பகுதிகளில் மொத்தம் 67 அங்கன்வாடி மையங்கள் இருக்கின்றன. அதில் 14 அங்கன்வாடி மையங்கள் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. அதனால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருணை உள்ளத்தோடு, அந்தப் பகுதிகளை நேரடியாக ஆய்வு செய்ய அரசு அதிகாரிகளை அனுப்பி, அந்தப் பணிகளை உடனடியாக செய்து கொடுக்க ஆவன செய்யவேண்டுமென்று மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்லாட்சியில், மாண்புமிகு அமைச்சர் அவர்களை வேண்டி, விரும்பி தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

*முற்பகல் 10-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, மதுரை மாவட்டத்தில் புதிதாகக் கட்டப்படவிருக்கும் மொத்த மையங்களின் எண்ணிக்கை 361. மேற்கு வட்டாரத்தில் புதிதாகக் கட்டப்படவிருக்கும் மையங்களின் எண்ணிக்கை 32. அந்த மையங்களில், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்ற மையங்களையும் இணைத்து, வெகு விரைவில் கட்டுவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 185, மாண்புமிகு உறுப்பினர் திரு. சோழன் சித. பழனிச்சாமி, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**185—**

## காகித அட்டை தொழிற்சாலை

***47169—திரு. சோழன் சித. பழனிச்சாமி:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டை ஊராட்சி ஒன்றியம்,

2014 ஜூலை 18]

புளியாலில் காகித அட்டை தொழிற்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆணையைப்பெற்று, திருச்சி மாவட்டம், மணப்பாறை தாலுகா, மொண்டிப்பட்டி கிராமத்தில் 1,500 கோடி ரூபாய் முதலீட்டில் காகித அட்டை தொழிற்சாலை நிறுவப்பட்டுக் கொண்டிருக்கின்ற காரணத்தினால், தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் மூலமாக சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை ஒன்றியப் பகுதியில் புதிய காகித ஆலை கட்டுவதற்குண்டான சாத்தியக் கூறுகள் இல்லையென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு அம்மா அவர்கள், தென் மாவட்டங்களுக்கென்று பல்வேறு சலுகைகளை அறிவித்திருக்கின்றார்கள். தொழில்முனைவோர் எவரேனும் முன்வந்தார்கள் என்று சொன்னால், அவர்களுக்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, அங்கு காகிதத் தொழிற்சாலையை நிறுவுவதற்கு உறுதுணையாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சோழன் சித. பழனிச்சாமி அவர்கள்.

**திரு. சோழன் சித. பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசையை நோக்கி வணங்குகிறேன். சிவகங்கை மாவட்டத்திற்குப் பெருமை சேர்க்கின்ற வகையில், சுதந்திரப் போராட்டத் தியாகி வீரமங்கை வேலு நாச்சியார் அவர்களுக்கு மணிமண்டபமும், நினைவுத் தூணும் நிறுவுவதற்கு உத்தரவிட்டு, இன்றைக்கு அவர்களுடைய திருக்கரங்களால் திறந்திருக்கக்கூடிய மாண்புமிகு அம்மா அவர்களுக்கு சிவகங்கை மாவட்ட மக்களின் சார்பாக நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், சிவகங்கை மாவட்டத்தில் வாழ்வாதாரமாக இருக்கக்கூடிய முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தினை 136

அடியிலிருந்து 142 அடியாக உயர்த்துவதற்கு உத்தரவாதம் பெற்றுத் தந்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு மீண்டும் சிவகங்கை மாவட்ட மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னுடைய காரைக்குடி தொகுதிக்குட்பட்ட தேவகோட்டை ஒன்றியம், புளியால் பகுதியில் காகித அட்டை தயார் செய்யும் தொழிற்சாலையை நிறுவித்தர வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்களிடம் கோரிக்கை வைத்தபோது, அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தொழில்முனைவோர் முன்வந்தால் அந்தப் பகுதியில் காகித அட்டை தொழிற்சாலை ஏற்படுத்தித் தரப்படும் என்று சொல்லியிருக்கின்றார்கள். எங்கள் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், அது மிகவும் பின்தங்கிய மாவட்டம். விவசாயப் பெருமக்கள் நிறைந்த மாவட்டம்; சிவகங்கை மாவட்டத்தில் தொழில்வளம் இல்லாத காரணத்தினால், அங்கு இருக்கக்கூடியவர்கள் வேறு மாவட்டங்களுக்கும், மாநிலங்களுக்கும் வேலை தேடிச் செல்லக்கூடிய அவல நிலை இருக்கின்றது. அங்கே ஏழு முறை நாடாளுமன்ற உறுப்பினராகவும் மற்றும் மத்திய நிதியமைச்சராகவும் இருந்த திரு. ப. சிதம்பரம் அந்த மாவட்டத்தை மிகவும் மோசமான நிலைக்கு, பின்தங்கிய நிலைக்குத் தள்ளியிருக்கிறார். அந்த மாவட்டத்தில் தொழில்வளம் இல்லாத காரணத்தினால், அங்கே ஒரு காகித அட்டை தயார் செய்யும் தொழிற்சாலையை உருவாக்கித் தந்தால் படித்த இளைஞர்களுக்கு நன்றாக இருக்கும். அதை நிறைவேற்றித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு புதிய காகித அட்டை தயார் செய்யும் தொழிற்சாலை தொடங்க வேண்டுமென்று சொன்னால், கிட்டத்தட்ட 1,000 ஏக்கர் நிலம் வேண்டும். 25,000 கன மீட்டர் தண்ணீர் கிடைக்கவேண்டும். முதலீட்டுக்கு 1,500 கோடி ரூபாய் வேண்டும். தமிழ்நாடு செய்தித்தாள் நிறுவனம் மொண்டிப்பட்டியில் புதிய காகித ஆலை நிறுவி வருவதாக நான் ஏற்கெனவே சொன்னேன். மாண்புமிகு அம்மா அவர்கள் தென் மாவட்டங்களுக்கென்று பல்வேறு சலுகைகளை

2014 ஜூலை 18]

அறிவித்திருக்கிறார்கள். அந்த அடிப்படையில், புதியதாக தொழில்முனைவோர் யாராவது முன்வருவார்களென்று சொன்னால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு உறுதியாக அவர்களுக்கு உதவி புரியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

*முற்பகல் 10-35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. சோழன் சித. பழனிச்சாமி அவர்கள்.*

**திரு. சோழன் சித. பழனிச்சாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கை மாவட்டம், நலிவுற்ற மாவட்டமாக, பின்தங்கிய மாவட்டமாகத் திகழ்ந்து வருகிறது. தென் மாவட்டங்களில் தொழில் வளத்தை மேம்படுத்துவதற்காக, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, சிவகங்கை மாவட்டத்தைத் தேர்ந்தெடுத்து, அங்கே இடமெல்லாம் தேர்வு செய்திருக்கிறது. காரைக்குடி பகுதியில் 1,500 ஏக்கருக்கு மேல் இடம் இருக்கிறது. எனது கோரிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று, காரைக்குடி பகுதியில் இருக்கக்கூடிய நிலங்களைக் கையகப்படுத்தி, சிவகங்கை மாவட்டத்தில் மிகப் பெரிய தொழிற்சாலையை உருவாக்குவதற்கு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மானாமதுரை பகுதியில் ஒரு சிப்காட் வளாகம் இருக்கின்றது. கிட்டத்தட்ட 2,000 கோடி ரூபாய் அளவுக்கு முதலீடு செய்யப்பட்டு, பல்லாயிரக்கணக்கானோர் அங்கு பணியாற்றி வருகிறார்கள். தென் மாவட்டங்களில் இன்னும் அதிக தொழிற்சாலைகள் வரவேண்டும் என்பதற்காகத்தான், மாண்புமிகு அம்மா அவர்கள் பல்வேறு சலுகைகளை அறிவித்திருக்கின்றார்கள். அதன் அடிப்படையில், சிவகங்கை மாவட்டத்திலும் 2,000 ஏக்கர் நிலம் தேர்வு செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப்போன்று, இடம் தேர்வு செய்யப்பட்டதற்குப் பின்னால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு*

அளிக்கக்கூடிய பல்வேறு சலுகைகளைப் பார்த்து, தொழிலதிபர்கள் வரவிருக்கின்றார்கள். அந்த வகையிலே, சிவகங்கை மாவட்டத்திற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு முன்னுரிமை கொடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 186, மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். வெங்கடேசன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

**186—**

## பேருந்து வசதி

***19718—திரு. எல். வெங்கடேசன்:**

*மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருக்கோவிலூரிலிருந்து டி.தேவனூர் வழியாக வெள்ளம்புத்தூருக்கு பேருந்து இயக்க அரசிடம் ஏதேனும் செயற்குறிப்பு உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

*(அ) மற்றும் (ஆ) கும்பிட்ட கரம் விலகும் முன் வரம் தரும் அன்னை, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் திருக்கரங்களால், (மேசையைத் தட்டும் ஒலி) 11-9-2012 அன்று திருக்கோவிலூரிலிருந்து திருமலைப்பட்டி வழியாக டி.தேவனூர், வெள்ளம்புத்தூர் வழித்தடத்தில் புதிய நகரப் பேருந்து இயக்கம் தொடங்கி வைக்கப்பட்டு, மக்கள் பயனடைந்து வருகின்றனர் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். வெங்கடேசன் அவர்கள்.*